DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
O.S No. 185/2023
D.W. 1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ரெபேக்காள் |
| Husband's Name | : | திரு.தாவீத் ராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of June 2026.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை வாதி மோகன்ராஜ் என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்திருக்கிறார் என்று எனக்கு தெரியும். இந்த நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையுடன் வழக்குரையின் நகல் எனக்கு சார்வு செய்யப்பட்டது. அந்த வழக்குரையில் அசலுடன் சேர்த்து வட்டியும் ஆக ரூபாய் 30 இலட்சம் செலுத்த வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அப்படி தான் எனக்கு சார்வு செய்யப்பட்ட வழக்குரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. வாதி தாக்கல் செய்த வழக்குரையுடன் வா.சா.ஆ. 1 முதல் 6 வரை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த ஆவணங்களை எனது வழக்கறிஞர் மூலம் படித்துப் பார்த்து தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ. 1 பிராமிஸரி நோட்டு ஆகும். மற்ற ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியவில்லை. நான் என் சார்பாக ஏற்கனவே ஒரு வழக்கறிஞரை வைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன். தற்போது நான் வேறொரு புதிய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்தி வருகிறேன். நான் 12ம் வகுப்பு முடித்துவிட்டு செவிலியருக்கான பட்டயப் படிப்பு படித்திருக்கிறேன். எதிர் வழக்குரையை ஆங்கிலத்தில் என் முந்தைய வழக்கறிஞர் தாக்கல்

செய்திருக்கிறார். அதை படித்துப் பார்த்து ஒவ்வொரு பத்தியிலும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று என்னால் சொல்ல இயலாது. என்னிடம் காண்பிக்கப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தை எனது தற்போதைய வழக்கறிஞர் தயாரித்து வைத்திருந்ததில் நான் கையொப்பம் செய்தேன். எனக்கு தற்போது மதுரையை சேர்ந்த வழக்கறிஞர் குணசேகரபாண்டியன் என்பவர் வழக்கு நடத்தி வருகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சுமார் 4–5 மாதங்களுக்கு முன்பு கையொப்பம் வாங்கினார்கள். நான் அதில் கையொப்பம் செய்த சமயத்தில் என் முன்பாக உண்மை என்று கூறி கையொப்பம் செய்தார் என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் ஒரு வழக்கறிஞர் கையொப்பம் இடம் பெற்று இருந்தது. அந்த வழக்கறிஞர் கையொப்பம் நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்வதற்கு முன்பாகவே அதில் போடப்பட்டிருந்தது. சத்திய பிரமாண வாக்குமூலத்தை மதுரையில் உள்ள வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன். வாதி மோகன்ராஜை 10 முதல் 15 வருடங்களாக தெரியும். நான் தற்போது குடியிருக்கும் வீடு வாடகை வீடு ஆகும். அதில் கடந்த 3 வருடங்களாக வசித்து வருகிறேன். அதற்கு முன்பாக வினோபாஜி தெருவில் வசித்து வந்தேன். அந்த முகவரியில் வசித்ததற்கு ஆதாரம் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். வழக்கமாக நான் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையொப்பம் செய்வேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 1 பிராமிஸரி நோட்டில் ரெவன்யூ ஸ்டாம்பில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பத்திற்கு கீழே ரெபேக்காள் என்று நான் என் கைப்பட எழுதியிருக்கிறேன். நான் கையொப்பம் செய்வதற்கு கீழே தேதி, வருடம், மாதம் குறிப்பிட்டு போடும் பழக்கம் உண்டு. வாதி மோகன்ராஜ் ஓமந்தூர் அரசு மருத்துவமனையில் Dental Assistant ஆக வேலை பார்த்து வருகிறார். நான் வாதிக்கு எழுதி கொடுத்த பிராமிஸரி நோட்டில் 31.03.2018 அன்று கையொப்பம் செய்து கொடுத்தேன். ஆனால் அவர் 31.03.2020 என்று குறிப்பிட்டு வழக்கை போட்டுள்ளார். நான் 2018 ம் வருடம் மார்ச் மாதம் 31 ம் தேதி வாதி மோகன்ராஜிடம் கடன் வாங்கினேன். அதற்கு 2 வாரங்களுக்கு முன்பு நான் அவரிடம் என்னுடைய பணத்தேவையை குறிப்பிட்டு பணம் கேட்டேன். எனது மகன் படிப்பு செலவுக்காகவும், குடும்ப செலவுக்காகவும் ரூபாய் ஒன்றரை இலட்சம் பணம் தேவைப்பட்டது. எனது கணவர் மர வேலை காண்ட்ராக்டராக இருக்கிறார். அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 25,000 முதல் 30,000 வரை வருமானம் வரும். 2018ம் வருடத்தில் என்னுடைய மாத சம்பளம் ரூபாய் 40,000 இருக்கும். நான் வாதி மோகன்ராஜிடம் மருத்துவமனையில்

வைத்து தான் பணம் கடன் கேட்டேன். அவர் என்னிடம் சுமங்கலி பைனான்ஸ் நிறுவனத்திற்கு அழைத்து சென்று பணம் கடன் வாங்கி தருவதாக சொன்னார். நான் பணம் கடன் கேட்ட போது என் கணவர் உடன் இல்லை. அதன் பிறகு 31.03.2018 அன்று மாலையில் 04.00 மணிக்கு எனக்கும், வாதிக்கும் பணி முடிந்த பிறகு நான் வாதி வீட்டிற்கு செல்லவில்லை. வாதியும், நானும், என் கணவரும் சேர்ந்து சுமங்கலி பைனான்ஸ் நிறுவனத்திற்கு அன்று இரவு 08.00 மணிக்கு சென்றோம். நான் ஓமந்தூரில் இருந்து காட்டுரில் உள்ள என் வீட்டிற்கு சென்று எனது கணவரை அழைத்துக் கொண்டு பணம் கடன் வாங்க சென்றேன். அன்றைய தினம் என்ன கிழமை என்று நினைவில்லை. எனக்கு இரவு பணியும் உண்டு. பகல் பணி என்பது காலை 07.00 முதல் மாலை 04.30 மணி வரை ஆகும். இரவு பணி என்பது இரவு 07.00 முதல் காலை 07.00 மணி வரை ஆகும். கடந்த 31.03.2018 மற்றும் 31.03.2020 அன்று நான் பகல் பணி மேற்கொண்டேனா அல்லது இரவு பணி மேற்கொண்டேனா அல்லது என்ன பணி மேற்கொண்டேன் என்பது வருகைப் பதிவேட்டை பார்த்தால் தெரியவரும். வாதி என்னை திருச்சி அண்ணா சிலை அருகில் உள்ள பைனான்ஸ் கம்பெனிக்கு அழைத்து சென்றார். கொரனா காலகட்டத்தில் நான் தங்கி பணிபுரிந்தேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது மேல்அதிகாரிகள் தங்கி பணிபுரிய வேண்டும் என்று கொடுத்த உத்தரவு எதுவும் இல்லை. சுமங்கலி பைனான்ஸ்க்கு போகும் போது இரவு 08.00 மணி இருக்கும். அங்கு இரண்டு ஆண் நபர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் விபரம் எனக்கு தெரியாது. அங்கு பணத்தை பெற்றுக் கொண்டு விட்டு நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். வாதி தான் என்னிடம் இருந்து நான் கையொப்பம் செய்து கொடுத்த பிராமிஸரி நோட்டைப் பெற்று அவர்களிடம் கொடுத்தார். அதனை வாங்கி அந்த இரண்டு நபர்களிடம் யாரிடம் கொடுத்தார் என்று நினைவில்லை. அப்போது எனது கணவரும் உடன் இருந்தார். அந்த பிராமிஸரி நோட்டில் நான் வழக்கமாக தேதி போடுவதை போல் கையொப்பத்தின் கீழே தேதி போடவில்லை. கையெழுத்து போடவேண்டாம் என்று மோகன்ராஜ் சொன்னார். வாதி அவ்வாறு கூறியதாக பதில் அறிவிப்பு, எதிர் வழக்குரை மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 31.03.2020 அன்று பணம் கடன் வாங்கி கொண்டு வா.சா.ஆ. 1 கடனுறுதி சீட்டை எழுதிக் கொடுத்ததை மறுக்கும் விதமாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிராமிஸரி நோட்டு தவிர எந்த ஆவணமும் வாதி மோகன்ராஜிடம் கொடுக்கவில்லை. நான் கடன் வாங்கிய ஒன்றரை இலட்சம் ரூபாய் பழைய 500ரூபாய் நோட்டா அல்லது புதிய 500ரூபாய் நோட்டா என்று நினைவு இல்லை. என்னால் குறிப்பிட்டு சொல்லவும்

இயலவில்லை. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் தமிழில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் நான் படித்துப் பார்த்து புரிந்து தான் கையொப்பம் செய்தேன். அன்று 500ரூபாய் நோட்டு புதிய நோட்டு கொடுத்தார்களா, பழைய நோட்டு கொடுத்தார்களா என்றால் 100ரூபாய் நோட்டும் கொடுத்தார்கள். நான் 2018ம் வருடம் கடன் வாங்கியதால் எனக்கு நினைவு இல்லை. நான் இரண்டாவது கடன் வாதியிடம் ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் வாங்கினேன். அதை நான் 2020 ம் வருடம் வாங்கினேன். சாட்சி தற்போது 2019ம் வருடம் வாங்கியதாக கூறுகிறார். அந்த பணம் தேவைப்பட்டதாக கூறுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக நான் வாதியிடம் பணம் கேட்டேன் என்றால் சுமார் 1 மாதம் இருக்கும். குறிப்பிட்டு 2019ம் வருடம் எந்த மாதம், எந்த தேதி என்று என்னால் கூற இயலாது. நான் இரண்டாவது முறை வாதியிடம் வாங்கிய பணம் ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் பழைய 500 ரூபாய் நோட்டா அல்லது புதிய 500ரூபாய் நோட்டா என்று நினைவு இல்லை. 2018ம் வருடத்திற்கு முன்பு வாதியிடம் நான் பணம் கடன் வாங்கி இருக்கிறேன். இரண்டாவது கடன் தொகையை அண்ணா சிலை அருகே உள்ள பைனான்ஸ் கம்பெனிக்கு அழைத்து சென்று கொடுக்கவில்லை. அண்ணா சிலை அருகே வைத்தே கொடுத்துவிட்டார். அப்போதும் என் கணவர் உடன் இருந்தார். இரண்டாவது கடன் தொகை 2019ம் வருடம் பெற்றேன் என்றால் சரிதான். எனது கணக்குப்படி நான் வாதியிடம் வாங்கிய பணம் ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் ஆகும். அந்த ரூபாய் 4 இலட்சத்திற்கு பிறகு ரூபாய் 50 ஆயிரம் பத்து வட்டிக்கு வாதியிடம் வாங்கினேன். அவ்வாறு வாங்கிய தேதி, மாதம் நினைவு இல்லை. ஆனால் இரண்டாவது கடன் வாங்கிய பிறகு சுமார் ஒன்றரை வருடம் கழித்து ரூபாய் 50 ஆயிரம் கடன் வாங்கினேன். அந்த பணம் ரூபாய் 50 ஆயிரத்தையும் அண்ணா சிலை அருகே வைத்து கொடுத்தார். அதன் பின்னர் 11.08.2021 ல் ரூபாய் 1 இலட்சம் 10 வட்டிக்கு வாதியிடம் கடன் வாங்கினேன். அதன் பிறகு 08.11.2021 ல் வாதியிடம் ரூபாய் 1 இலட்சம் கடன் வாங்கினேன். அந்த பணம் ரூபாய் 1 இலட்சத்தையும் அண்ணா சிலை அருகே வைத்து வாதியிடம் வாங்கினேன். என் கணவரை வரச் சொன்னதால் அவரும் வந்திருந்தார். வாதி முதலில் வாங்கிய பிராமிஸரி நோட்டு தவிர அதன் பிறகு எனக்கு பணம் கொடுத்த போது என்னிடம் எழுதி வாங்கவில்லை. நானும் அவருக்கு வேறு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. நான் வாதியிடம் அவர் சொன்ன வட்டிக்கு ஒப்புக் கொண்டு தான் கடன் வாங்கினேன். எனக்கு ஓமந்தூர் அரசு மருத்துவமனை கனரா வங்கி கிளையில் கணக்கு உள்ளது. என் கணவரின் செல்போன் எண் 9789694544 ஆகும். என் கணவருக்கு வேறு ஒரு எண்ணும் உள்ளது. அது

குறித்து அவரிடம் கேட்டால் தான் தெரியும். வாதி மோகன்ராஜின் வங்கி கணக்கிற்கு எனது கணவர் உருமு தனலெட்சுமி கல்லூரி கிளை கனரா வங்கி கணக்கில் இருந்து 10.01.2022 ல் பணம் அனுப்பி இருக்கிறார். என் கணவர் தனிப்பட்ட முறையில் வாதி மோகன்ராஜிடம் பணம் கடன் எதுவும் வாங்கவில்லை. நான் வாதிக்கு செலுத்த வேண்டிய வட்டி வகைக்காக எனது கணவர் அவரது வங்கி கணக்கில் இருந்து பணம் அனுப்பி இருக்கிறார். நான் வாதிக்கு தனிப்பட்ட முறையில் வங்கிக் கணக்கில் இருந்து பணம் செலுத்தியிருக்கிறேன். அதற்குரிய ஆவணங்கள் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். நான் வாதியிடம் வாங்கிய கடன் தொகை ரூபாய் 6 இலட்சத்திற்கு மாதம் வட்டி ரூபாய் 41,000 ஆகும். ரூபாய் 41,000 வட்டி தொகையை 08.11.2021 ல் இருந்தே செலுத்தி வந்தேன். அதை என் கணவர் கணக்கில் இருந்து செலுத்தி வந்தேன். என்னுடைய பதில் அறிவிப்பில் இந்த விபரங்கள் சொல்லவில்லை. நான் நேரடியாக வாதியின் கணக்கில் வட்டி செலுத்தியதற்காக ஆதாரம் எதுவும் இல்லை. எனது கணவர் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 6000 வீதம் எவ்வளவு காலம் செலுத்தினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வாதி தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் நான் வட்டி தொகையாக ரூபாய் 1,45,000 செலுத்தியதாக கூறியுள்ளேன். நான் வாதியிடம் ரூபாய் 1,00,000, ரூபாய் 84,000, ரூபாய் 90,000, ரூபாய் 1,80,000 மேலும் ஒரு ரூபாய் 1,00,000 ஆக மொத்தம் ரூபாய் 5,88,000 கொடுத்தேன். அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. அந்த தொகைகள் அனைத்தும் 2022 ம் வருடத்தில் கொடுக்கப்பட்டவை ஆகும். நானும், என் கணவரும் தான் பணத்தை கொடுத்தோம். வேறு சாட்சிகள் இல்லை. நான் கொடுத்தது அசலுக்காக தான் அந்த பணத்தை கொடுத்தேன். நான் வாதியிடம் வாங்கிய கடன் ரூபாய் 6 இலட்சத்து 50 ஆயிரத்தை திருப்பி கொடுத்துவிட்டேன் என்பது எதிர் வாதம் ஆகும். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 9வது பத்தியில் நான் வாதியிடம் வாங்கிய கடன் ரூபாய் 5 இலட்சத்து 88 ஆயிரத்தை திருப்பி கொடுத்துவிட்டேன் என்று கூறியிருக்கிறேன். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 11வது பத்தியில் வாதி என்னிடம் கொடுத்த கடன் தொகை ரூபாய் 5 இலட்சத்தை ஜனவரி, 2022 ல் இருந்து ஜீன், 2022க்குள் திரும்ப செலுத்தாவிட்டால் ரூபாய் 5 இலட்சம், ரூபாய் 18 இலட்சமாக அதிகமாகிவிடும் என்று குறிப்பிட்டு கூறியது எந்த தேதி, மாதம், வருடம் என்றால், மார்ச் 2021 ஆகும். மார்ச் 2021 க்கு பிறகு நான் வாதிக்கு ரூபாய் 10,000 மற்றும் ரூபாய் 20,000 ஆக கொடுத்தேன். நான் வாதிக்கு கையொப்பம் செய்து கொடுத்த பிராமிஸரி நோட்டை திருப்பி கொடுக்க சொல்லி அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் தாக்கல் செய்த எதிர்

வழக்குரையில் திலக் என்பவரை பற்றி நான் எதுவும் குறிப்பிடவில்லை. சுமங்கலி பைனான்ஸ் நிறுவனத்திற்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Copy